17.யா/சா/1935 திருமதி.இந்திராணி ஸ்ரீதரன்
18.யா/சா/2311 திரு.இளையதம்பி சிவராசமூர்த்தி
19.யா/சா/2370 திருமதி.லலிதா இலட்சுமணன்
20.யா/சா/2383 திரு.வைத்திலிங்கம் சற்குணநாதன்
21.யா/சா/2838 திருமதி.தவமணி தங்கராசா
22.யா/சா/2981 திரு.செல்லப்பா பரமேஸ்வரன்
23.யா/சா/3055 திருமதி.கமலாம்பிகை வினாசித்தம்பி
24.யா/சா/3057 திருமதி.பரமேஸ்வரி மார்க்கண்டு
25.யா/சா/3154 திரு.பாலசுந்தரம் சிறிபாலசிங்கம்
26.யா/சா/3199 திருமதி.சீதாதேவி சச்சிதானந்தன்
27.யா/சா/3358 திரு.பேரம்பலம் சந்திரகாயன்
28.யா/சா/3415 திருமதி.சரஸ்வதி யோகராசா
29.யா/சா/3421 திரு.வினாசித்தம்பி குணசிங்கம்
30.யா/சா/3423 திருமதி.வாரித்தம்பி சிதம்பரம்
31.யா/சா/3464 திரு.சுந்தரம் கதிரவேலு
32.யா/சா/3539 திரு.ஞானசேகரம் வாரித்தம்பி
33.யா/சா/3596 திரு.தம்பு கந்தையா தெய்வேந்திரம்
34.யா/சா/3626 திருமதி.இராசம்மா கயிலாயபிள்ளை
35.யா/சா/3768 திருமதி.வள்ளிப்பிள்ளை சின்னத்துரை
36.யா/சா/3836 திரு.தம்பிஐயா குமாரசாமி
37.யா/சா/3845 திரு.சின்னையா அருளம்பலம்
38.யா/சா/3848 திரு.சின்னத்தம்பி குமாரசாமி
39.யா/சா/4284 திரு.சின்னத்தம்பி செல்லப்பா
40.யா/சா/4344 திரு.ஐயம்பிள்ளை சின்னையா
41.யா/சா/4430 திரு.கந்தையா யோகரத்தினம்
42.யா/சா/4539 திரு.ஆசைப்பிள்ளை பாலசிங்கம்
43.யா/சா/4623 திரு.குமார் துரைச்சாமி
44.யா/சா/4763 திருமதி.அன்னலட்சுமி சின்னத்துரை
45.யா/சா/4765 திருமதி.நந்தினி சுப்பிரமணியம்
46.யா/சா/4771 திருமதி.நல்லம்மா ஆனந்தம்
47.யா/சா/4951 திரு.வயிரமுத்து திருத்தணிகாசலம்
48.யா/சா/5282 திரு.மார்க்கண்டு செல்வரத்தினம்
49.யா/சா/5362 திரு.வயிரவன் சின்னத்தம்பி
50.யா/சா/5468 திரு.அருமைநாயகம் குருபரன்
51.யா/சா/5485 திருமதி.மல்லிகாதேவி செல்வராசா
52.யா/சா/5561 திரு.சுப்பிரமணியம் நடராசா
53.யா/சா/5569 திருமதி.மீனாம்பிகை செந்தில்நாதன்
54.யா/சா/5906 திரு.வல்லி அன்னராசா
55.யா/சா/5916 திரு.சடையர் சுப்பிரமணியம்
56.யா/சா/5989 திரு.கந்தையா பொன்னம்பலம்
57.யா/சா/6050 திருமதி.பராசக்தி சிவசண்முகம்
58.யா/சா/6221 திரு.சண்முகம் புஸ்பராசா
59.யா/சா/6450 திருமதி.மல்லிகாதேவி வேலாயுதம்
60.யா/சா/6506 திரு.சின்னவன் கந்தசாமி
61.யா/சா/6712 திரு.கந்தப்பு பாலசுப்பிரமணியம்
62.யா/சா/6751 திரு.வேலன் கந்தையா
63.யா/சா/6906 திரு.சின்னத்தம்பி கனகசபை
64.யா/சா/7069 திரு.நடராசா சிவராஜா
65.யா/சா/7378 திரு.சின்னைய்யா கந்தசாமி
66.யா/சா/7550 திரு.சின்னத்தம்பி கந்தசாமி
67.யா/சா/7566 திரு.வேலுப்பிள்ளை சுரேந்திரா
68.யா/சா/7595 திருமதி.இராசம்மா குருநாதர்
69.யா/சா/7621 திருமதி.கனகமணி சின்னத்துரை
70.யா/சா/7806 திருமதி.பொன்மணி சிவராசா
71.யா/சா/7901 திரு.அருணாசலம் தில்லைநாயகர்
72.யா/சா/7995 திரு.வைத்திலிங்கம் சிதம்பரப்பிள்ளை
73.யா/சா/8178 திரு.இளையதம்பி சுந்தரலிங்கம்
74.யா/சா/8278 திரு.முத்து தில்லையம்பலம்
75.யா/சா/8359 திரு.சின்னப்பு கணேசலிங்கம்
76.யா/சா/8426 திருமதி.விக்டோறியா இமானுவல்
77.யா/சா/8484 திரு.திசைவீரசிங்கம் தருமரத்தினம்
78.யா/சா/8695 திரு.தர்மலிங்கம் சந்தணராசா
79.யா/சா/9076 திரு.முத்து கந்தவனம்
80.யா/சா/9120 திருமதி.புனிதநந்தினி ஜெயராசா
81.யா/சா/9328 திரு.கந்தசாமி தயாபரன்
82.யா/சா/9343 திரு.நாகர் சிவலிங்கம்
83.யா/சா/9353 திரு.சுவாம்பிள்ளை இராசரத்தினம்
84.யா/சா/9369 திரு.பொன்னையா செல்வரத்தினம்
85.யா/சா/9379 திரு.வேலுப்பிள்ளை சின்னப்பு
86.யா/சா/9424 திரு.கனகசுந்தரம் கணபதிப்பிள்ளை
87.யா/சா/9507 திரு.வேலுப்பிள்ளை துரைராசன்
88.யா/சா/9538 திரு.சின்னப்பு செல்லத்துரை
89.யா/சா/9651 திரு.வேலுப்பிள்ளை இரத்தினராசா
90.யா/சா/9700 திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரராசா
91.யா/சா/9733 திருமதி.பத்மலோசினி ரவிச்சந்திரன்
92.யா/சா/9793 திரு.அருளானந்தம் கணேந்திரன்
93.யா/சா/9833 திருமதி.தங்கமணி சின்னத்தம்பி
94.யா/சா/9844 திருமதி. யோகம்மா வினாசித்தம்பி
95.யா/சா/9857 திரு. விசுவலிங்கம் சிவானந்தன்
96.யா/சா/9893 திரு. வேலுப்பிள்ளை மாணிக்கம்
97.யா/சா/9963 திரு. மயிலன் நடேசபிள்ளை
98.யா/சா/9997 திரு. மாதன் தம்பிஐயா
99.யா/சா/10002 திரு. இராசையா பாலசுப்பிரமணியம்
100.யா/சா/10034 திரு. மயில்வாகனம் சிறிதரன்
101.யா/சா/10073 செல்வி. இரமணிசியாமா நடராசா
102.யா/சா/10092 திரு. கந்தன் இளையவன்
103.யா/சா/10219 திரு. பரமானந்தர் அம்பாலவாணபிள்ளை

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

**காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.யா/கா/40 திரு.ஆறுமுகம் இராசநாயகம்
2.யா/கா/61 திரு.சண்முகம் பேரம்பலம்
3.யா/கா/63 திருமதி.இராஜராஜேஸ்வரி பொன்னையா
4.யா/கா/66 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
5.யா/கா/71 திருமதி.தவமணி மகாதேவா
6.யா/கா/77 திரு.சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி
7.யா/கா/99 திருமதி.செல்லாச்சி இராசையா
8.யா/கா/107 திரு.சங்கரப்பிள்ளை தில்லையம்பலம்
9.யா/கா/108 திரு.முத்தையா பரமநாதன்
10.யா/கா/152 திரு.முருகர் வைரமுத்து
11.யா/கா/155 திரு.கந்தையா சுப்பிரமணியம்
12.யா/கா/156 திரு.ஆறுமுகம் சிற்றம்பலம்
13.யா/கா/163 திரு.நாகமுத்து நடராசா
14.யா/கா/164 திருமதி.பரமேஸ்வரி நமசிவாயம்
15.யா/கா/167 திரு.முருகேசு சின்னத்துரை
16.யா/கா/179 திரு.இராசையா செல்லத்துரை
17.யா/கா/184 திரு.கந்தையா சிவஞானம்
18.யா/கா/187 திருமதி.ரோகணிஅம்மா கணேசபிள்ளை
19.யா/கா/203 திருமதி.பரிமளம் செல்லத்துரை
20.யா/கா/212 திருமதி.சரஸ்வதி மார்க்கண்டு
21.யா/கா/221 திரு.தம்பிப்பிள்ளை முருகேசு
22.யா/கா/224 திரு.கார்த்திகேசு நாகேந்திரம்
23.யா/கா/234 திரு.தம்பர் காசிப்பிள்ளை முருகேசு
24.யா/கா/251 திரு.சபாபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
25.யா/கா/259 திருமதி.நீலாவதி துரைராஜசிங்கம்
26.யா/கா/267 திருமதி.அமுதம் தர்மலிங்கம்
27.யா/கா/276 திருமதி.பாக்கியம் இராசதுரைசிங்கம்
28.யா/கா/284 திருமதி.சிவசோதி இரத்தினசிங்கம்
29.யா/கா/293 திருமதி.மனோண்மணி நல்லதம்பி
30.யா/கா/301 திரு.குமாரவேல்பிள்ளை நமசிவாயம்
31.யா/கா/302 திரு.சங்கரப்பிள்ளை சேனாதிராசா
32.யா/கா/329 திரு.நமசிவாயம் குமாரசாமி
33.யா/கா/331 திரு.கந்தையா பாலசிங்கம்
34.யா/கா/336 செல்வி.மகேஸ்வரி ஆறுமுகம்
35.யா/கா/340 திரு.கந்தையா கனகசபை
36.யா/கா/342 திரு.கந்தையா கிருஷ்ணதாஸ்
37.யா/கா/346 திருமதி.பரமேஸ்வரி செல்வநாயகம்பிள்ளை
38.யா/கா/348 திருமதி.கோமதி நாகேந்திரம்
39.யா/கா/354 திருமதி.முத்தம்மா சுப்பிரமணியம்
40.யா/கா/361 திரு.குமாரு வேலுப்பிள்ளை
41.யா/கா/363 திரு.கணபதிப்பிள்ளை நல்லையா
42.யா/கா/376 திரு.நாகமுத்து நாகலிங்கம்
43.யா/கா/377 திருமதி.சரஸ்வதி திருநாவுக்கரசு
44.யா/கா/381 திரு.சிவகுரு கந்தையா
45.யா/கா/393 திரு.விஸ்வநாதஐயர் மகாதேவசர்மா
46.யா/கா/394 திரு.பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை
47.யா/கா/395 திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம்
48.யா/கா/408 திருமதி.பார்வதி சேனாதிராசா
49.யா/கா/413 திருமதி.சின்னாச்சிப்பிள்ளை கதிரவேலு
50.யா/கா/417 திரு.வேலுப்பிள்ளை நடராசா
51.யா/கா/418 திரு.கணபதிப்பிள்ளை கார்த்திகேசுநடராசா
52.யா/கா/443 திரு.பொன்னம்பலம் சுப்பிரமணியம்
53.யா/கா/450 திருமதி.பராசக்தி சோமசுந்தரம்
54.யா/கா/458 திரு.தில்லையம்பலம் சிவசம்பு
55.யா/கா/463 திரு.கதிரன் சுப்பன்
56.யா/கா/467 திரு.அப்புத்துரை கிருஸ்ணபிள்ளை
57.யா/கா/476 திருமதி.கனகம்மா பொன்னம்பலம்
58.யா/கா/481 திரு.கணபதிப்பிள்ளை இந்திரன்
59.யா/கா/491 திருமதி.பார்வதி பாலசுப்பிரமணியம்
60.யா/கா/492 திரு.கதிரவேலு தில்லையம்பலம்
61.யா/கா/496 திருமதி.சரஸ்வதி ஆறுமுகம்
62.யா/கா/497 திருமதி.அலிஸ்நாகம்மா பெஞ்சமின்
63.யா/கா/498 திருமதி.லீலாவதி முருகேசு
64.யா/கா/504 திருமதி.நாகம்மா பொன்னம்பலம்
65.யா/கா/534 திரு.ஆறுமுகம் இராஜகோபால்.
66.யா/கா/535 திரு. கந்தையா நடராசா
67.யா/கா/538 திரு. அம்பலவாணர் கனகசபை
68.யா/கா/558 திரு. கயிலாசபிள்ளை சடாட்சரம்
69.யா/கா/567 திரு. கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்
70.யா/கா/568 திருமதி. பாலாமணி கந்தசாமி
71.யா/கா/571 திருமதி. பரமேஸ்வரி இராசையா
72.யா/கா/578 திரு. நமசிவாயம் நடராசா
73.யா/கா/586 திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு
74.யா/கா/602 திரு. சுப்ரமணியம் தம்பிப்பிள்ளை
75.யா/கா/604 திரு. ஆறுமுகம் கோவிந்தபிள்ளை
76.யா/கா/610 திருமதி. மகேஸ்வரி நமசிவாயம்
77.யா/கா/612 திருமதி. யோகாம்பிகை கணேஷபிள்ளை
78.யா/கா/634 திரு. கதிர்காமு திருனானந்தம்
79.யா/கா/642 திரு. வெற்றிவேலு குலசேகரம்பிள்ளை
80.யா/கா/661 திருமதி. மகேஸ்வரி நீலகண்டர்
81.யா/கா/663 திரு. செல்லப்பா மாணிக்கவாசகர்
82.யா/கா/668 திருமதி. கனகாம்பிகை பேரம்பலம்
83.யா/கா/684 திரு. முத்துக்குமாரு தெட்சனாமூர்த்தி
84.யா/கா/692 திரு. குமாரசாமிஐயர் அமிர்தேஸ்வரசர்மா
85.யா/கா/694 திரு. சுப்பிரமணியம் முருகேசு
86.யா/கா/696 திருமதி. பரமேஸ்வரி நல்லையா
87.யா/கா/698 திருமதி. மகேஸ்வரி நடராசா

(தொடரும்)



# காதுக்குள் பூச்சி...!

காதுக்குள் ஒரு பொருள் விழுவதற்கும், உயிருள்ள பூச்சி செல்வதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இதில் பொருளால் எந்த ஆபத்தும் இல்லை. ஆனால் உயிருள்ள பூச்சி சென்றால் சிக்கல்தான்.

பொருள் கிடந்தால் அதைச் சற்றுநேரம் கழித்து மருத்துவரிடம் காட்டி எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் உயிருள்ள பூச்சி புகுந்து விட்டால், அது வெளியேவருவதற்காக போராடும் இந்தப் போராட்டத்தால் நமக்கு கடுமையான வலி தோன்றும். இதில் சில நேரம் காது செவிப்பறையில் பெரிய சேதம் உண்டாக வாய்ப்புள்ளது.

பூச்சி உள்ளே புகுந்தால் உடனடி வேலையாக தண்ணீர் அல்லது சுத்தமான தேங்காய் எண்ணெய்யை காதில் விட்டு பூச்சியை சாகடிக்கவேண்டும். பூச்சியைச் சாகடித்துவிட்டோம் என்றால், பிறகு பூச்சியும் ஒன்றுதான், பொருளும் ஒன்றுதான்.

ஆனால் பொருள் ஏதாவது தப்பித் தவறி உள்ளே புகுந்துவிட்டால். நம் மக்கள் ஆலாய் பறக்கிறார்கள். கையில் கிடைத்ததை எல்லாம் வைத்து பொருளை எடுக்க பகீரத பிரயத்தனம் செய்கிறார்கள். இதுபோன்று அனாவசியமாக உள்ளே நுழைக்கப்படும் குச்சி உள்ளிட்ட பொருட்கள், உள்ளேசென்ற பொருளை இன்னும் அதிக ஆழத்துக்குக்கொண்டு சென்றுவிடும். பிறகு என்ன? சாதாரண்மாக முடியக்கூடிய விஷயத்தை அறுவை சிகிச்சை செய்துதான் சரிசெய்ய வேண்டும்.

# ஞாபசக்தி என்றால் என்ன தெரியுமா?

மனித மூளையிலுள்ள செல்களில் 96 சதவிகிதம் நினைவு வைத்துக்கொள்ளும் வேலையை செய்வதில்லை. மனிதனுக்குள்ள மொத்த நினைவாற்றல் திறனில் 4 சதவிகிதத்தைத்தான் அவன் பயன்படுத்துகிறான்.

உலக மக்களில் ஒரு சதவிகிதத்தினர் தங்களது நினைவாற்றல் திறனை திறமையுடன் பயன்படுத்திப் பெயர் எடுக்கின்றனர். அபாரமான நினைவுத் திறன் கொண்டவர்களும் உள்ளனர். அது மட்டுமின்றி கம்பியூட்டர் போன்று விரைவாக கணக்குகளைச் செய்து முடிக்கும் நபர்களும் உள்ளனர். அத்தகையவர்கள் அவர்களது நினைவாற்றல் திறனில் ஏறக்குறைய 50-60 சதவிகிதம் பயன்படுத்துகின்றனர் என்று அர்த்தம்.

மனித உடலின் மொத்த எடையில் மூளை 2.5 சதவிகிதமே என்றால் கூட, அது மனிதனது சக்தியில் 20 சதவிகிதத்தைப்பயன்படுத்ததுகிறது. ஆகவே மனிதன் தனது மூளையைச் சரிவரக் கவனித்து அதற்குப் போதுமான உணவையும் அளிக்க வேண்டும்.

சில வேளைகளில் மூளைக்கு மருந்து கொடுப்பதும் அவசியம். மூளைத் தளர்ச்சி என்பது ஒரு நோய். அதற்கு மருந்து கொடுக்க வேண்டியது அவசியம். 'குளுக்கோஸ்' மூளைக்குப்பிரதானமாக போஷாக்கு அளிக்கிறது. மூளை வேலை செய்யும் போது வளர்சிதை மாற்றத்தைத் துரிதப்படுத்துவதற்காக சில பொருள்களைச் சேர்ப்பது அவசியம். குளுடமினிக் அமிலம், மெதியனைன் விற்றமின் பி-1, பி-2, பி-6 ஆகியவை அத்தகைய பொருள்களாகும்.

மத்தியநரம்புமண்டலத்தை நல்லநிலையில் வைத்திருப்பதற்குச் சரியான உழைப்பு உள்ளத் தூண்டல்களும் கூட அவசியம். ஒருவரைப் பெரிதும் களைப்படையவும் சோர்வடையவும் செய்வது அதிக உழைப்பு அல்ல குறைவான உழைப்பே ஆகும்.

அதாவது இரவு நேரத்தில் குறிப்பாகக் காலை 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் மனிதனது நினைவு ஆற்றல் மிகவும் பலவீனமாக இருக்கும். அவனது இயக்கங்கள் மிகவும் மந்தமடைகின்றன. அந்த நேரத்தில் கணிதப் பயிற்சியில் ஈடுபட்டால் பல தவறுகள் ஏற்படும் உடனே சே! எனக்குக் கணிதமே வராது என்று முடிவு செய்யக்கூடாது.


தீவிரமான வேகத்துடன் எந்த நேரத்தில் மூளை பணிபுரிய முடிகிறதோ அந்த நேரத்தை நாம் பெரிதும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவை அடிக்கடி கிடைப்பதில்லை. அந்த நேரத்தில் நமது கவனத்தை அங்குமிங்கும் அலையவிடக் கூடாது. அந்த நேரத்தில் வேறு வேலைகளையும் மேற்கொள்ளக்கூடாது. பகலில் 12 மணியிலிருந்து 2 மணி வரை 'பலவீனமான' கால கட்டமாகும். காலை 8 மணியிலிருந்து 12 வரை, மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை மனிதனது திறமைகள் மிக உயர்ந்த நிலையில் இருக்கும். மன உழைப்பின் தீவிரமும் வேலைநேரத்திலேயே மாற்றமடையக் கூடும். ஆரம்பத்தில் 20 நிமிடத்திலிருந்து 60 நிமிடம் வரை மனிதன் தான் செய்ய வேண்டிய வேலைக்குஏற்ப தன்னைத் தயார்செய்கிறான். மிகத்தீவிரமான உழைப்பிற்குப் பின்னர் சோர்வு தட்டுப்படத் துவங்குகிறது.

சாதாரணமான சுழ்நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் ஒரு மனிதனது திறனை அதிகரிக்க முடியும். இசை பல்வேறு வண்ணங்கள் போன்ற தூண்டல்கள் இதமிளக்கவும் கூடும். சிலருக்கு எரிச்சலூட்டவும் கூடும். சிலருக்கு வேலையில் ஈடுபாடு கொள்ளத் தூண்டும். அவை வேறு சிலருக்குக் கவனக்குறைவை ஏற்படுத்தக் கூடும். அது அந்தந்த நபரின் தனிப் பண்புகளைப் பொறுத்தது. எரிச்சல் ஏற்படும் போது உங்களை இதப்படுத்த இசையோ அல்லது வண்ணங்களோ எது தேவை என்பதை நீங்களே அறிந்துகொள்ள வேண்டும். களைப்படைந்திருக்கும் போது உற்சாக மூட்டித்தக்க இசைப் பாடல்கள் அல்லது சிவப்பு சார்ந்த வண்ணங்கள் பயனளிக்கும்.

அரைமணி நேரத்தில் ஒரு மனிதன் பெற்ற விவரங்களில் 40 சதவிகிதத்தை அவன் மறந்து விடுகின்றான். மறுநாள் அவன் 34 சதவிகிதத்தையே நினைவில் கொள்கிறான். மூன்று தினங்களுக்குப் பின்னர் 25 சதவிகிதத்தையும் அவன் நினைவில் தக்க வைக்க முடிகிறது. அதன்பிறகு அப்படியே குறைகிறது.

மீண்டும் மீண்டும் கூறுதல் அல்லது படித்தலே கற்றலின் அடிப்படை. ஒரு விஷயத்தைக் கற்ற பின்னர் அதை 15-20 நிமிஷங்களுக்குப் பின்னர் 8-9 மணி, 24 மணிக்குப் பின்னர் நினைவுப்படுத்திப் பார்ப்பது அவசியம்.

மாணவர்கள் படுக்கைக்குச் செல்வதற்கு 15-20 நிமிஷங்களுக்கு முன்னரும் காலை படுக்கையை



விட்டு எழுந்தவுடன் ஒரு முறையும் கற்றலை நினைவு படுத்திப் பார்ப்பது பயனளிக்கும்.

உங்களது நினைவாற்றலைக் கூர்மையாகவும், தீவிரமாகவும் வைத்திருங்கள். வெறுமனே திருப்பித் திருப்பி ஒன்றைப் படிப்பதை விட, அந்த வாசகத்தை நாமே புரிந்து பின்னர் அதை நமது சொந்த வார்த்தைகளில் வெளியிடுவது பயன்தரும். எதையேனும் ஒன்றைப் படித்த பின்னர் மனதிற்குள் அதை மீண்டும் சொல்லிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு அது நினைவுக்கு வரவில்லையென்றால் உடனே புத்தகத்தைத் திருப்பாதீர்கள். நினைவுக்குக் கொண்டு வர முயற்சி செய்யுங்கள். அதற்காக அதிகப் பிரயாசை கொள்ள முடியவில்லை என்றால் புத்தகத்தைத் திருப்பிப் பார்ப்பது நல்லது. நினைவாற்றலைப் பயிற்சியின் மூலம் வளப்படுத்த முடியும். கவிதைகளை மனப்பாடம்செய்வது மிகச் சிறந்த பயிற்சி.

நினைவாற்றல் 20-25 வயது வரை வளர்ச்சியடைகிறது. 40-45 வயது வரை அது நிலையாக நீடிக்கிறது. அதற்குப் பின்னர் அது பலவீனமடைகிறது. எனவே மூளைக்கு ஏற்ற சத்தாண உணவு, ஓய்வு, பயிற்சி ஆகியவற்றின் மூலம் உங்கள் நினைவாற்றலைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 69

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

'ஜெயம்' புகழ் நாயகியான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 05ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.



நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 69**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவு செய்யபபடடு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 69

படத்தில் உள்ளவரின் பெயர் :-.........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-.........................

அனுப்புபவரின் முகவரி :-.........................

.........................

.........................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 67

சரியான விடை





நடிகை ரீமாசென்

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 67இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

முதற் பரிசு :- S.தவராசா
எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.


இரண்டாம் பரிசு :-சொ.நித்தியா
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மூன்றாம் பரிசு :-வே.குமாரசுவாமி
பரமாந்தர் வளவு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

சி.கோவிந்தராஜன், நல்லூர். P.ராணி, சங்கானை. வி.இளங்கோ, கோப்பாய் து.நக்கீரன், மல்லாகம். சொ.பவானி, கொக்குவில். லோ.அபிராமி, வல்வெட்டி. L.கீர்த்திகா, உடுப்பிட்டி. த.பிரதீபன், வடமராட்சி. ம.ஜனா, இணுவில். N.நிகா, உடுவில். இ.அருந்தது, யாழ்ப்பாணம். இ.ராஜன், வல்வெட்டி. ச.திவ்வியசசி, சித்தன்கேணி. வ.சுதர்ஸன், நாவலர்வீதி. அ.அனித்தா,சித்தன்கேணி. N.நட்சத்திரா, நல்லூர். T.நிஷாந்தினி, அராலி. K.யாழினி, ஏழாலை. T.திலீப், வட்டுக்கோட்டை. T.நாயகி, வண்ணார்பண்ணை. வி.நந்துஜா, கொக்குவில். T.துஷ்யந்தன், அராலி. V.சுபோதினி, நாவாந்துறை.

# மாதா கோயிலில் துளசி!



மாதா கோயிலில் துளசியா என்றுதானே யோசிக்கிறீர்கள்? கிரேக்க நாட்டு மாதா கோயில்களில் துளசியை மிகவும் தூயதாக மதிக்கின்றனர். யேசுவின் கல்லறை மீது இது முளைத்ததாகவும் அதனால் தான் இதனை வழிபடுவதாகவும் கூறுகின்றனர். 'செயின்ட் பேஸில் தினம்' எனப்படும் துளசி உற்சவத்தன்று பெண்கள் இச் செடியின் கிளைகளை எடுத்துக்கொண்டு ஆசி பெறுவதற்காகக் கோயிலுக்குச் செல்வர். வீடு திரும்பியதும் அதில் ஒரு பகுதியை தரையில் ஓரமாக வைத்திருப்பர். இதனால் புது வருடம் அவர்களுக்குப் பாக்கியத்தைத் தரும் என்று நம்புகின்றனர். வீட்டிலுள்ளோர் அனைவரும் சிறிது துளசியை வாயில் போட்டுக் கொண்டு மீதியை அலுமாரிகளில் வைப்பர்.




## ஒட்டகச் செய்திகள்

ஒட்டகத்திற்கு மூன்று வயிறுகள் உள்ளன.

ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது.

ஒட்டகம் 600 கிலோ எடை வரை சுமக்கும்.

ஒட்டகம் தொடர்ந்து 15 மணி நேரம் நடக்கும்.

ஒட்டகங்கள் அதிகம் காணப்படும் நாடு சோமாலியா.

ஒட்டகத்திற்கு மூளை மிகக் குறைவு.

## அச்சத்தை வென்ற காகம்

ஒரு காட்டில் கோகு என்ற காகம் இருந்தது. அதன் அலகு சற்றே மடங்கிய நிலையில் அவலட்சணமாக காட்சியளிக்கும். இதனால் அந்தக் காகத்திற்கு எப்போதும் தன்னைப் பற்றி ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்து கொண்டே இருந்தது. ஏதாவது ஒரு காக்கைக் கூட்டத்தைக் கடந்து போகும்போது தன்னைப் பற்றியும் தனது மடங்கிய அலகைப் பற்றியும் மற்றக் காகங்கள் கேலி பேசுமோ என்ற சிந்தனையுடன் பதற்றத்துடன் தான் பறந்து போகும். மற்றக் காகங்களிடமிருந்து தனது அலகை மறைத்தபடிதான் கோகு காகம் செல்லும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருநாள் அவலட்சணமான உடல் அமைப்புக் கொண்ட போகு என்ற இன்னொரு காகத்தை அது சந்தித்தது. போகுவிற்கு உடல் மட்டுமல்ல அதன் அலகும் கூட ஒரு மாதிரி மடங்கிய நிலையில்தான் இருந்தது.

அந்தக் காகத்துடன் ஒப்பிடுகையில் கோகுவின் உடல் ஊனம் ஒரு பெரிய குறையாக இல்லை. அதேசமயம் போகு காகம் மிகவும் சந்தோஷமாக வாழ்வதையும் மற்றக் காகங்களுடன் எந்தவித தாழ்வு மனப்பான்மையும் இன்றி வாழ்வதையும கண்டு போகு காகம் ஆச்சர்யப்பட்டது.

மெல்ல அருகில் சென்ற கோகு, உடல் ஊனமுற்ற காகத்தைப் பார்த்து மெல்லிய குரலில் "நீ எப்படி இருக்கிறாய்?" என்றது.

உடனே அதற்கு உடல் ஊனமுற்ற போகு பலமான குரலில் "நீ சொல்வது என் காதுகளில் விழவில்லை. எனக்கு காது கொஞ்சம் மந்தம். அதனால் இன்னும் சத்தமாகப் பேசு" என்றது.



அதைக் கேட்ட கோகு காகம் "நான் உன்னிடம் என்ன கேட்கநினைத்தேனோ அதையே நீ சொல்லி விட்டாய். நான் வருகிறேன் நண்பனே" என்றவாறு அங்கிருந்து பறந்துவிட்டது.

நாட்கள் பல கடந்தன. இந்த நாட்களில் கோகுவின் தன்னம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்திருந்தது. மடங்கிய தனது அலகினால் தான் தாழ்வுமனம்பான்மை கொள்ளத் தேவையில்லை என்பதை அது உணர்ந்திருந்தது. அதன் பிறகு எந்தக் காகத்தைக் கண்டாலும் அது பயந்து ஒளிவதில்லை.

தவிர தன்னைப் பற்றி யார் என்ன கேலி செய்தாலும் அதைப் பெரிதாகவும் எடுத்துக்கொள்வதில்லை. இதனால் கோகு காகத்திற்கு நாளடைவில் அதன் கூட்டத்தில் நல்ல மரியாதையும் மதிப்பும் கிடைத்தது. அடுத்த சில வாரங்களில் அது தனது காக்கை கூட்டத்திற்கு தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது.

ஒருநாள் காட்டில் இருந்த எல்லா காக்கைகளின் கூட்டத்திற்குமான மூத்த தலைவர் காகத்தைச் சந்திக்கும் வாய்ப்பு கோகுவிற்கு ஏற்பட்டது. அப்போது மூத்த தலைவர் காகம் கோகுவிடம்,

"நீ கோழையாக இருந்ததாக கேள்விப்பட்டேன். இப்போது எப்படி நீ புகழ்பெற்றவனாகி விட்டாய்" என்றது.


"எனக்கு நானே சில நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டேன். யார் எனது ஊனத்தைப் பற்றிக் கேலி செய்தாலும் அதை நான் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. நம்மைப் பற்றி மற்றவர்களின் விமர்சனங்கள் நம்மைப் புண்படுத்துவதாக ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால் என்னிடமிருந்த தாழ்வு மனப்பான்மையை ஒதுக்கி வைத்துவிட்டு எங்கள் கூட்டத்தினரோடு கூட்டமாக நானும் கல கலப்பாகப் பேசினேன். எனது தன்னம்பிக்கை இன்னும் அதகரித்தது. எங்கள் கூட்டத்தினரும் என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்" என்றது கோகு.

மூத்த தலைவர் காகம் அதைக்கேட்டு கோகுவைப் பாராட்டியது. "உன்னைப் போல்தான் எல்லோரும் இருக்கவேண்டும்" என்று முதுகில் தட்டியும் கொடுத்தது.

அப்போதுதான் கோகு மூத்த தலைவர் காகத்தைக் கூர்ந்து பார்த்தது. அதன் அலகைவிட மூத்த தலைவரின் அலகு இன்னும் சற்று மடங்கியிருப்பது தெரியவந்தது.

## கன்றுக் குட்டி

அம்மா என்று அழைக்கும்
ஆடி ஓடிக் களித்திடும்
சும்மா நிற்க மறுத்திடும்
சுறுசுறுப்பாய் திரிந்திடும்



பச்சைப் புல்லைக் கடித்திடும்
பாலை முட்டிக் குடித்திடும்
குச்சுப் போன்ற கால்களால்
குதிக்கும் பிறகு படுத்திடும்

கயிறு கொண்டு கட்டினால்
கொம்பில் லாமல் முட்டியே
பயமும் இன்றித் துள்ளித் தான்
பாயும் கன்றுக் குட்டியே.

மா. கண்ணன்.

## பொது அறிவு

- காற்று நகரம் என்று அழைக்கப்படுவது சிகாகோ நகரம்.
- கூடைப் பந்தாட்டம் ஒலிம்பிக் போட்டியில் 1936ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது.
- தபால் பெட்டிகளுக்கு வர்ணம் பூசும் பழக்கம் 1876இல் தொடங்கப்பட்டது.
- சாலையோர அறிவிப்புப் பலகைகள் 1861ஆம் ஆண்டில் தான் முதன் முதலில் வைக்கப்பட்டது.
- ஐ.நா.சபை கட்டடத்தில் மொத்தம் 6,50,000 கண்ணாடி ஜன்னல்கள் அமைந்துள்ளன.
- திருக்குறளில் ஒரே தலைப்பில் வரும் இரண்டு அதிகாரம் 'குறிப்பறிதல்'.
- பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் போர் நடந்ததாகக் கூறப்படும் குருஷேத்திரம் ஹ ரியானா மாநிலத்தில் உள்ளது.
- உயில் எழுதி வைக்கும் வழக்கத்தை முதலில் ஏற்படுத்தியவர்கள் ரோமானியர்கள்.

லோ. அபிராமி,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## அப்பளம் மொறுமொறுப்பாக இருப்பது ஏன்?

அப்பளம் பொரித்த பின்னர் மொறுமொறுப்பாக இருப்பது ஏன் தெரியுமா?

அப்பளத்தில் சோடியம் பைகார்பனேட் உள்ளது. அப்பளத்தை பார்சல் கட்டுவதற்கு முன் வெயிலில் உலர்த்துவார்கள். அப்போது அதில் உள்ள தண்ணீர் ஆவியாகிவிடும்.



எனினும் சோடியம் பைகார்பனேட்டில் சிறிது தண்ணீர் இருக்கும்.

அப்பளத்தை எண்ணெய்யில் பொரிக்கும்போது வெப்பத்தில் இந்தத் தண்ணீர் வெளியேறும். அதனால் அப்பளம் விரிவடைந்து மொறு மொறுவென சிறுவர்களுக்குப் பிடித்தமாதிரி ஆகிறது.



## கண்டுபிடிப்பாளர்கள்


ஐன்ஸ்டீன் ஜான் டால்டன் ஆடம்ஸ்மித்

*கிரிக்கெட்டின் தந்தை - டபிள்யு,. வீ. கிரேஸ்

*உயிரியலின் தந்தை - சார்லஸ் டார்வின

*விண்ணோக்கியின் தநதை - ல்வன் ஹாக

*சமூகவியலின் தநதை - எமிலி டர்க்ஹொயாம்

*தற்கால சமதர்மக்கொள்கையின் தந்தை- வில்லியம் காட்வின்

*இந்திய கிரிக்கெட்டின் தந்தை - டி. பி. தியோதர்

*பொருளாதாரத்தின் தநதை - ஆடம் ஸ்மித்

*கதிரியக்கத்தின் தந்தை - அந்தோணி பெக்காரெல்

*நவீன ஓவியததின் தநதை - எடோர்ட் மானட்

*அணு விஞ்ஞானத்தின் தந்தை - ஜான் டால்ட்டன்

*உயிா வேதியயலின் தநதை - பிரடேரிக் கவுலண்ட் ஹாப்கினஸ

*ராக்கெட்டுகளின் தநதை - ஆர். எச். கோட்டர்ட்

*இயற்பியலின் தநதை - சேர். ஐசக் நியட்டன்

*சுருக்கெழுத்தின் தநதை - சேர். ஐசக் பிட்மென்

*அணு யுகத்தின் தந்தை - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

*ஒப்பிலக்கணத்தின் தந்தை - வரமாமுனிவர்

*ஐ.நா.சபையின் தந்தை - கோர்டல் ஹால்

(முற்றும்)

## ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி

ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி கி.பி.1884ஆம் ஆண்டு பிரசுரத்திற்கு வந்து 1934ஆம் ஆண்டு வெளியானது.

இதில் 4 இலட்சத்து 14 ஆயிரத்து 825 சொற்களும் 3 இலட்சம் சொற்பொருள் இலக்கணங்களும் 18 இலட்சத்து 27ஆயிரத்து 304 சொல் உபயோகங்களும் 12 நூற்றாண்டுகளாக நிகழ்ந்த சொற்களின் சரித்திரமும் அடங்கியுள்ளன.

## தண்ணீர்

வளர்ச்சி பெற்ற மனித உடலின் எடையில் 2/3 பாகம் தண்ணீர் உள்ளது. நீர் மிகவும் முக்கியமான பொருளாகும். ஏறத்தாழ 75 வயது வரை வாழும் ஒருவர் 70,000 லீற்றர் நீர் குடிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மனிதனின் சிறுநீரகம் நாளொன்றுக்கு 2000 லீற்றர் தண்ணீரை வடிகட்டி சுழற்சி செய்வதாக மருத்துவ நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

## கிளிகள்



கிளியின் சராசரி ஆயுட்காலம் 50 ஆண்டுகள். சில இனக் கிளிகள் 120 ஆண்டுகள் உயிர் வாழும். கிளிக்கு கேட்கும் சக்தி அதிகம். கிளி ஓராண்டிற்கு ஒரு முட்டை மட்டுமே இடும்.

சியா என்ற கிளிகள் மாமிசம் உண்ணும்.


## எறும்புகள்


சுறுசுறுப்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் எறும்புகளுக்கு தனது எடையைப்போல் 50 மடங்கு எடையுள்ள கற்களை அனாயாசமாக அப்பால் நகர்த்தும் ஆற்றல் உண்டு. தனது எடையைப் போல மூன்னூறு மடங்கு கனமுள்ள ஒரு பொருளை இழுத்துச் செல்லும் வலிமை உடையது எறும்பு.

## கண்டுபிடியுங்கள்

சிறுவர்களே!

இங்கே உள்ள ஒரே மாதிரியான இரண்டு ஒட்டகங்களில் 9 வித்தியாசங்கள் இருக்கின்றன. அவை எவை என்பதைக் நீங்களே கண்டுபிடிக்க வேண்டும். இது உங்கள் மூளைக்கு வேலை!





# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

⑩

என். சொக்கன்

வீரப்பனைத் தேடுகிறோம் என்ற போர்வையில், காட்டு எல்லையில் உள்ள கிராமங்களிலும், மலைவாசிகளின் குடியிருப்புப் பகுதிகளிலும், அதிரடிப் படையினர் நுழைந்து, பல அட்டூழியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது.

இந்தப் பகுதிகளில் உள்ள ஆண்களை, 'வீரப்பனுக்கு உதவினார்கள்'' என்று குற்றம் சுமத்திக் கைது செய்து, அடித்து, கொடூரமாகச் சித்திரவதை செய்வது, பெண்களைக் கற்பழிப்பது என்று பலவிதமான அத்துமீறல்களை செய்திருப்பதாக அதிரடிப்படையினர் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

மேற்சொன்ன குற்றச்சாட்டுக்களில் எந்தளவு உண்மை, எவையெல்லாம் பொய் என்று உறுதியாக இன்னும் தீர்மானமாகவில்லை. ஆனால் இந்த விஷயத்தில் வீரப்பன் மிகவும் தீவிரமாக இருந்திருக்கிறான். அதிரடிப்படை அல்லது வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் மீது 'கற்பழிப்பு' போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்ட போது அவர்களை உடனடியாக கடத்திச் சென்று கொன்றிருக்கிறான் வீரப்பன். அதேபோல் தன்னைக் காட்டிக் கொடுக்கிறவர்களின் மீதும் உடனடியாகக்கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடியவன் வீரப்பன். தன்னுடைய குழுவில் இருக்கிறவர்கள் அல்லது சுற்றியுள்ள கிராமஙகளில் உள்ளவர்கள் தன்னைப் பற்றி காவல்துறைக்கு ஏதும் தகவல் கொடுத்திருப்பதாகத் தெரியவந்தால் அவர்களுக்கு வீரப்பன் வைத்திருக்கும் ஒரே தண்டனை மரணம தான்.



இப்படிக் கொடூரனாகக் காட்சிதரும் வீரப்பன் , அவன் சார்ந்த சில கிராமங்களுக்கு காவல் தெய்வமாகவும் தெரிந்திருக்கிறான். அவனுடைய சம்பாத்தியத்தின் ஒரு பகுதி இந்தக் கிராமங்களின் வளர்ச்சிப் பணிகளுக்காகவும, அங்கிருக்கும் மக்களுக்காகவும் நேரடியாக செலவிடப்பட்டிருக்கிறது என்பது போன்ற தகவல்கள் எந்தளவு உண்மையோ ஆச்சரியம் அளிக்கின்றன.

மீண்டும் 1993க்கு வருவோம். இரண்டு அதிரடிப்படைகள் ஓர் எல்லைப் பாதுகாப்புப் படை என்று மொத்தம் மூன்று படைகள் வீரப்பனை மும்முரமாக தேடிக்கொணடிருக்க அதே சமயத்தில் அவனுடைய குழுவினரின் ஆதரவும் லேசாக சரிந்து கொண்டிருக்க முதன் முறையாக தான் மாட்டிக் கொண்டுவிடுவோமோ என்று வீரபபனுக்கு பயம் எழுந்திருக்க வேண்டும். ஆகவே தான் சரணடையத் தயாராக இருப்பதாகவும தனக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை எழுப்பினான் வீரப்பன்.

அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டதாகத் தெரியவில்லை, ஆனால் வீரப்பனைத் தேடும் நடவடிக்கைகள் மேலும் தீவிரமடைந்தன.

இதையடுத்து, 1994ஆம் ஆண்டு இறுதியில், மேலும் ஓர் அதிரடிக் கடத்தலை அரங்கேற்றினான் வீரப்பன். இந்த முறை, யானைத் தந்தத்தையும் சந்தன மரத்தையும் அல்ல. நிஜ மனிதர்களையே கடத்திக கொண்டு வந்துவிட்டான். கோவையைச் சேர்ந்த சிறுமுகை வனப்பகுதியில் சிதம்பரநாதன் என்ற டி.எஸ்.பியையும் அவருடைய இரண்டு உறவினர்களான ராஜகோபாலையும் சேகரையும் கடத்திக் கொண்டு வந்தான் வீரப்பன். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் ஆயிரம் கோடி ரூபா பணம் தரவேண்டுமென்று தமிழக அரசுக்கு நிபந்தனை! ஆனால் அரசு தரப்பிலிருந்து அந்தக் கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. ஆகவே வீரப்பன் மிகவும் எரிச்சலடைந்தான்.

பரபரப்பான இந்தச் சூழலில் தான் காட்டில் பணயக் கைதிகளாக இருந்த சிதம்பரநாதனும் மறறவர்களும் வீரப்பனின் கூட்டாளிகள் இருவரை (இந்த இருவரும் காவல்துறையிடம் பின்னர் சரணடைந்தார்கள்) அழைத்துக்கொண்டு தப்பிவிட்டார்கள்.

(ஆனால் சுனாத் ரகுராம் தன் புத்தகத்தில் வால்டர் தேவாரம் தலைமையிலான அதிரடிப் படையும் கர்நாடக அதிரடிப் படையும் வீரப்பன் கூட்டத்தைத் தாக்கி சிதம்பரநாதனையும் மற்ற இருவரையும் விடுவித்ததாகச் சொல்கிறார்)

சிதம்பரநாதன் வீரப்பன் பிடியில் அகப்பட்டிருந்த நேரத்தில் வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் தன் காலில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு சிகிச்சைபெற கோவை அரசு மருத்துவமனையில் சேர்ந்திருந்தான். சிதம்பரநாதன் வீரப்பன் பிடியில் இருக்கும் வரை தனக்கு தமிழகப் பொலிஸாரால் எந்த ஆபத்தும் நேராது என்று எண்ணியிருந்தான். ஆனால் சிதம்பரநாதன் தப்பியதும் தமிழகப் பொலிஸ் அர்ச்சுனனையும் அவனது இரண்டு கூட்டாளிகளையும் கைதுசெய்து விட்டது.

அதைத் தொடர்ந்து கர்நாடக பொலிஸ் அர்ச்சுனனையும் அவனது கூட்டாளிகளையும் நீதிமன்ற உத்தரவின் மூலம் தன் பிடிக்குள் கொண்டு வந்தது. அவர்களை இடம் மாற்றும் பொழுது பொலஸ் வானிலேயே அர்ச்சுனனும் அவன் கூட்டாளிகளும் சயனைடு சாப்பிட்டு இறந்துவிட்டனர்.

இதை வீரப்பன் கொ ஞ்சமும் நம்பவில்லை. அர்ச்சுனனை கர்நாடக அதிரடிப்படையினர் தான் திட்டமிட்டு கொன்றுவிட்டார்கள் என்று அவன் உறுதியாக நினைத்தான். (ஆகவே பின்னர் அர்ச்சுனனின் மரணத்திற்கு பதிலடியாக சில பழிவாங்கல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டான் வீரப்பன்)

மொத்தத்தில் வீரப்பனின் இந்தக் கடத்தல் நடவடிக்கை ஒரு 'மெகா' சொதப்பலாக அமைந்துவிட்டது. என்றாலும் அடுத்த வருடமே வேறொரு மனிதக் கடத்தலில் இறங்கினான் அவன்.

இந்தமுறை ஈரோடு-அந்தியூர் காட்டிலிருந்து மூன்று வனத்துறை அலுவலர்களை கடத்தி வந்தான் வீரப்பன். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் ஐந்து கோடி ரூபா பணம் தரவேண்டுமென்று பேரம் பேசப்பட்டது.

அந்தப் பணம் அவனுக்கு கிடைத்ததா என்று பார்ப்பதற்கு முன் வேறொரு விஷயத்தை சிந்திக்க வேண்டும். அதுவரை சந்தன மரக் கடத்தல்காரனாக அறியப்பட்டிருந்த வீரப்பன் திடீரென்று இப்படி மனிதர்களை கடத்தத் தொடங்கியது ஏன்?

இதற்கு முக்கியமான காரணம், இரண்டு மாநிலங்களின் அதிரடிப்படைகள் அவனைச் சூழ்ந்திருந்ததுதான். அதுவரை வீரப்பனுடைய தொழிற்சாலையாகவும் விற்பனை நிலையமாகவும் இருந்த அந்தக் காட்டுக்குள் நுழையும் வெளியேறும் வழிகளெல்லாம் இப்போது மிகக் கவனமாக பாதுகாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டன. இதன்மூலம் வீரப்பனின் வியாபார நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. பொருளாதார நிலைமையும் சரிந்தது.


ஆகவே, காட்டிலிருந்து எதையும் கடத்தி விற்கமுடியாது என்பதால் காட்டுக்குள் வருகிற அதிகாரிகளையும் மற்றவர்களையும் கடத்தி சிறை வைத்து அவர்களை விடுவிப்பதற்கு கொடுக்கப்படும் பணயத் தொகையில் கொஞ்சக் காலத்திற்கு குளிர் காயலாம் என்று வீரப்பன் எண்ணியிருக்க வேண்டும்.

ஆனால், இதிலும் அவனுக்கு பெரிய தொகை எதுவும் கிடைத்துவிடவில்லை. உதாரணமாக மேற்சொன்ன அந்தியூர் கடத்தல் விவகாரத்தில் அவன் எதிர்பார்த்தது ஐந்து கோடி ரூபா. ஆனால கிட்டத்தட்ட இருபது நாட்கள் காத்திருந்த பின் அவனுக்கு கிடைத்தது வெறும் மூன்றரை இலட்சம் தான் என்று பேச்சு.

*(தொடரும்)*

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று தீர்த்தத் திருவிழா



### தீர்த்தமாடி தீர்வு பெற்றோம்

நல்லூரில் தீர்த்த மாடினோம்
நம் வினைகளெல்லாம் தீர்ந்தது
எல்லோரும் கூடினோம்
எங்கள் நல்லூரான் தீர்த்தத்தில் ஆடினோம்
பொல்லா பாவம் தொலைந்தது
புது வாழ்விங்கு மலந்தது
காவடிகள் ஆயிரமிங்கு வந்தது
கற்பூரச் சட்டிகளின் நேர்த்தி நிறைந்தது
தேவனவன் தேவியர்கள் சகிதமாய்
தீர்த்த மாடி அருள் பொழிந்தான்
சாபமெல்லாம் விலகிப் போனது
சரித்திர பிரசித்தியான புனித மண்ணில்
தேசமினி விடிவுபெறப் போகிறது
தீர்வு பெற்ற இனமாய் நாங்க வாழ்வமினி

*மதுரகவி*

### சுதந்திர தீர்த்தம்

ஏரியிலே நீரெடுத்து வேல் குளிக்கும்
ஏழைகளின் வாழ்வுயர பால் கொடுக்கும்
சூரியனின் ஒளியிலே இருள் போக்கும்
சுதந்திர தீர்த்தத்திலே அருள் நிறைக்கும்

*நல்லை அமிழ்தன்*

### ஓமெனும் பிரணவத்தை உரைத்தவா

கந்தன் என்னும் பெயர் சொல்லிப் பாடவா
காவடி எடுத்து நின்று ஆடவா
சந்தத் திருப்புகழ்தனைப் பாடவா-உந்தன்
சன்னதியில் வந்து நின்று ஆடவா

அன்பர்கள் கூட்டத்தில் சேரவா மயில்
ஆட்டத்தைப் பார்த்து எனை மறக்கவா
துன்ப வினை அகல இன்பநிலை பெருக
நல்லூர்ப் பதியில் வளர் தேவா உந்தன் சன்னதியில்
உமை நாயகன் திருச்செவி அதனில்
ஓமெனும் பிரணவத்தை உரைத்தவா
குமர குருபரனே முருகா தயாபரனே
அமரர்க் கதிபதியே ஆறுமுக வேலவனே

*சின்கந்தையா பொன்னாவளை*

### நாமினிதேயிருக்கயருள் தருவாய்

கோபம் கொள்வது முண்டு உன் திருத்தலத்தில் நீ
பாவம் செய்தவர்களின் பொன்னகையையும் போக்கிடுவாய்
யாவும் உன் செயல்தான் புன்னகை பூத்த எம்மிறைவா
சோகம் எமக்கினி வேண்டாம் நாமினிதேயிருக்கயருள்
தருவாய்

*எஸ்.எஸ்.காசிப்பிள்ளை*

### நல்லூரி லானாய் சரணம்

விண்ணவர் சிறைமீட்ட வீரா சரணம்
வேதமூலப் பொருள்புகர் வேந்தே சரணம்
மண்ணில் மலைகள் மகிழ்வாய் சரணம்
மலரயன் மயல்தீர் மைந்தா சரணம்
பண்ணில் பாவொலி நீயே சரணம்
பாவந் தீர்க்கும் பாவல சரணம்
நண்ணுமவர்க்கு ஞானப் பொருளாய் சரணம்
நானிலத்தில் நல்லூரி லானாய் சரணம்

*சிவ சண்முகவடிவேல்*

### தீர்த்த விழாக்கண்டு...

தீர்த்த விழாக்கண்டு
களிக்கவந்த மக்களெல்லாம்
நேர்த்திக் கடன் செய்து
மாவிளக்குத் தானெரிப்பர்
பார்த்த விடமெல்லாம்
பஜனைசெய்யும் கூட்டங்களுள்
ஆர்த்த திருமந்திரக்
குழுதான் உயர்ந்ததுவே

*கவிமணி கந்தமுருகேசதாசனார்*

மனநலன் மன் உயிர்க்கு ஆக்கம் இனநலன்
எல்லாப்புகழும் தரும் - குறள்

வலம்புரி

## கிளிநொச்சிப் பிரகடனம் அரசுக்கான இறுதிச்சந்தர்ப்பம்

தமிழீழப் போராட்டம் ஒரு சாராரின் உடையது. அது விடுதலைப்புலிகளின் போராட்டம். இவ்வாறு வர்ணித்த தென்னிலங்கை பேரினவாதிகளுக்கு கிளிநொச்சிப் பிரகடனம் பதிலடி கொடுத்துள்ளது.

இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கிளிநொச்சியல் ஒன்று கூடி தமது உள்ளார்ந்த விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழீழ போராட்டம் விடுதலைப்புலிகளுடையது என்றால் இலட்சக்கணக்கான மக்கள் கிளிநொச்சிப் பிரகடனத்தில் எவ்வாறு ஒன்று கூடினர். இந்த கேள்வியை சிங்கள மக்கள் ஒவ்வொருவரும் தம்முள் எழுப்பவேண்டும்.

சிங்கள பேரினவாதிகளின் கருத்துக்களையும், இனவாத தூபமிடும் சிங்கள ஊடகங்களையும் நம்பிக்கொண்டிராமல் உண்மைநிலையை அறிவதில் சிங்கள மக்கள் ஆர்வம் கொள்ள வேண்டும்.

காலாகாலமாக தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், கஷ்டங்களின் ஒரு திரண்ட வடிவமே நேற்று முன்தினம் நடந்த எழுச்சிப்பிரகடனம் ஆகும்.

இலங்கையின் சுதந்திர காலம் முதல் தமிழ் மக்கள் தமது இறைமையை-உரிமையை உறுதிப்படுத்துமாறு சிங்கள ஆட்சியாளர்களிடம் கேட்டிருந்தனர்.

தமது கோரிக்கைக்கு வலுச்சேர்ப்பதற்காக தேவையானபோதெல்லாம் அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். முடிபு பொலிஸாரின் தடியடிப் பிரயோகமும் சிறையடைப்புமாகவே இருந்தது.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென அன்றைய ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் கிளிநொச்சிப்பிரகடனம் தேவையற்றதாக இருந்திருக்கும்.

ஆட்சியாளர்கள் அன்று விட்ட தவறின் திரண்ட வடிவமாக கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடந்த எழுச்சிப்பிரகடனத்தைக் கொள்ளலாம். படையினர் எவரும் நுழைய முடியாத இடத்தில் தனித்து விடுதலைப்புலிகளின் நிர்வாகம் மட்டும் நடைபெறும் பிராந்தியத்தில் இந்த எழுச்சிப்பிரகடனம் நடந்துள்ளது.

சுருங்கக்கூறின் இலங்கைத் தீவில் சுதந்திரமடைந்த நிலப்பரப்பில் இந்த எழுச்சிப்பிரகடனத்தை தமிழ் மக்கள் நடத்தியுள்ளனர்.

இது பற்றி சிங்கள ஆட்சியாளர்களும் ஜே.வி.பி போன்ற பேரினவாதிகளும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1974ஆம் ஆண்டு உலகத்தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றபோது அதற்குரிய மதிப்பு வழங்காமல் சிங்களப் பொலிஸார் கண்டபாட்டில் சுட்டுத்தள்ளினர்.

மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் உயிரைக்கையில் பிடித்தவாறு ஓடித்தப்பினர். அன்று உயிரைக்காப்பாற்ற ஓடிய தமிழ்மக்களை பார்த்து பொலிஸார் ஏளனச்சிரிப்பைக் கொட்டினர்.

அன்று தாம் செய்த அடாவடித்தனமே இன்று கிளிநொச்சியில்-விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழ் மக்கள் அச்சமின்றி ஒன்று கூடி எழுச்சிப்பிரகடனம் செய்துள்ளனர் என்ற உண்மையை இப்போது இலங்கைப் பொலிஸார் உணர்ந்திருப்பர்.

இது எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய ஓர் விடயமாகும். அன்று நடந்ததன் விளைவு இவ்வாறெனின் இனியும் காலம் தாழ்த்தாது தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க வேண்டுமென சிங்கள ஆட்சியாளர்கள் நினைப்பாரளோயானால் நிச்சயம் இலங்கையின் அரசியல் எல்லையை பிரிபாடின்றி வரையமுடியும்.

# ஜனாதிபதித் தேர்தல் முடிவு எதுவாயினும் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முடிவில்லை

## 'தினமணி' நாளேடு சுட்டிக்காட்டு

ஜனாதிபதித் தேர்தல் முடிவு எப்படி இருப்பினும் ஈழப் பிரச்சினையின் முடிவுக்கான அடையாளங்கள் தென்படவிலலை என தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் தினமணி நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

'திடீர் திருப்பம்' என்ற தலைப்பில் தினமணி நாளேட்டில் நேற்று முன்தினம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. தினமணி தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த ஒருவார காலத்துக்குள் இலங்கையில் அரசியல் நிலவரம் அடியோடு மாறிவிட்டது. இதற்கு முதன்மையான காரணம் ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் இந்த ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதியுடன் முடிந்துவிடுவதாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பே ஆகும்.

அதோடு அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் தேர்தல் ஆணையருக்கு நீதிமனறம் ஆணையிட்டுவிட்டது. 1999ஆம் ஆண்டு இறுதியில் நடந்த தேர்தலில் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டபோதிலும், 2000 டிசம்பரிலேயே இப் பதவிக்கான உறுதிமொழியை எடுத்துக்கொண்டதாகவும், அதனால் இப் பதவிக்குரிய ஆறாண்டுக் காலம் 2006 டிசம்பரிலேயே முடிவதாகவும் சந்திரிகா எழுப்பிய வாதத்தை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

இந்நிலையில் தீர்ப்பு வெளியான நாளிலிருந்தே அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகத் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக முன்னாள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் களத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அச் சம்பவத்தின் பாதிப்பு எவ்வளவு தூரம் இருக்கும் என்பதை இப்போதைக்கு திட்டவட்டமாகக் கணிப்பதற்கில்லை.

இது ஒருபுறமிருக்க, திடீரென வரவிருக்கும் இத் தேர்தல் இலங்கை இனப்பிரச்சினையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. கதிர்காமர் படுகொலைச் சம்பவத்திற்குப் பிறகும் தற்பொழுது நடைமுறையில் இருந்துவரும் யுத்த நிறுத்த உடன்படிக்கை நீடிக்கும் என்று சந்திரிகா அரசு அறிவித்துள்ளது. ஆனால் தேர்தல் ஆதாயத்துக்காக சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி யின் ஆதரவை நாடவேணடிய கட்டாயம் சந்திரிகாவின் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

சில நிபந்தனைகளுடன் ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிக்க ஜே.வி.பி.முன்வந்திருக்கிறது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இக் கட்சியுடன் கூட்டணி அமைத்து சந்திரிகாவின் கட்சி போட்டியிட்டு பாராளுமன்றத்தைக் கைப்பற்றி, கூட்டாட்சியை அமைத்தது. ஆயினும் ஈழப்பிரச்சினையில் ஜே.வி.பி விதித்த பல்வேறு "முட்டுக்கட்டைகளை" சந்திரிகா ஏற்க மறுத்ததால் கூட்டணியிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியதையொட்டி அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டது.

இத்தகைய இக்கட்டான சூழலில் திடீரென எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவை நாட வேண்டிய கட்டாயம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க பலமான முதிர்ந்த அரசியல்வாதி இத் தேர்தலில் யாருக்கு வெற்றிபெற வாய்ப்புண்டு என்பதைக் கணிப்பது சிரமமே.

தேர்தலில் போட்டியிடும் இருவரில் யார் வெற்றிபெற்ற போதிலும் ஈழப் பிரச்சினை தீர்வுக்கான வழிவகைக்கு சாத்தியக்கூறுகள் சொற்பமே. வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று ஜனாதிபதியானால் ஜே.வி.பி.யை மீறி இப் பிரச்சினையில் சுதந்திரமாக நடந்துகொள்ளத் துணிவாரா? என்பது சந்தேகத்துக்குரியதே. கூட்டாட்சிமுறை அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே எதிர்ப்பது ஜே.வி.பி இலங்கையை இரு இனங்களும் இரு கலாசாரங்களும் கொண்ட நாடாகவே ஏற்க மறுப்பது அக்கட்சி. அதோடு பேரினவாத ஆட்சிக்கு உட்பட்டுத்தான் தமிழர்கள் வாழ வேண்டும் என்ற மூர்க்கம் கொண்ட கட்சியும் கூட.

அப்படியிருக்க, அதன் ஆதரவுடன் ஜனாதிபதி பதவிககு வருபவரால் எப்படி சுயேச்சையாக நடந்துகொள்ள முடியும்? ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்ற போதிலும் சந்திரிகா கட்சியினுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஈழப்பிரச்சினையில் அரசியல் சட்டபூர்வமான தீர்வைக் காண்பது கடினமே. எனவே இத் தேர்தல் முடிவு எப்படி இருப்பினும் ஈழப்பிரச்சினையின் முடிவுக்கான அடையாளங்கள் தென்பாடாது எனவும் தினமணி தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ற-4)

# 2 இலட்சம் வாக்குகளைத் தனித்துப் பெற்றால் ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு ஐ.தே.க உடன்படும்

(கொழும்பு)

ஜே.வி.பி தனித்து நின்று ஜனாதிபதித்தேர்தலில் 2 இலட்சம் வாக்குகளைப் பெறுவதானால் அதன் நிபந்தனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உடன்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். ஜே.வி.பி மக்கள் மத்தியில் தமக்கிருந்த செல்வாக்கு சரிந்ததையடுத்தே எவருக்காவது ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது.

இதனடிப்படையிலேயே அக்கட்சி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது. ஐ.தே.க.வின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்த 15 வருடக் கொள்கை தொடர்பிலான நிலைப்பாட்டை ஜனநாயக மறுப்பு என அமைச்சர் மங்கள சமரவீர விமர்சித்தமை மிகவும் கண்டனத்துக்குரியது.

இதன்மூலம் மங்கள சமரவீரவிற்கு தேசியக் கொள்கை என்றால் என்ன? என்பது புரியவில்லை. ஜனாதிபதித் தேர்தல் 6 வருடங்களுக்கொருமுறை இடம்பெற வேண்டும் என நாங்கள வலியுறுத்தி வந்தோம். இந்நிலையில் அதனை ஏற்றுக் கொள்ளாமல் 2006ஆம் ஆண்டிலேயே தேர்தல் நடாத்தப்பட வேண்டுமெனக் கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நீதிமன்றம் சென்றமை ஜனநாயக விரோதமாகும்.

எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சில விடயங்களில் பொதுக் கொள்கை இருக்குமானால் மாத்திரமே நாட்டில் முன்னேற்றம் கருதி திட்டங்களை முன்னெடுக்க முடியும். 1977ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி கொண்டுவந்த திறந்த நிலை பொருளாதாரத்தை அன்று பலரும் எதிர்த்தனர். எனினும் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.உட்பட்ட அனைத்துக் கட்சிகளும் அதற்கு அப்பால் சென்று செயற்பட முடியாத நிலைக்கு உட்பட்டுள்ளன.

எனவே, தேசியக்கொள்கை என்ற அம்சத்துக்கு இணங்க வேண்டியது அவசியம் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் வலியுறுத்தியுள்ளார். (ற-4)

# சிறுவருக்கென ஒதுக்கப்பட்ட பெருந்தொகைநிதி பயனற்ற வகையில் செலவழிக்கப்படுகின்றது

## வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் உளநல சமூக மற்றும் ஆன்மக மேம்பாடுகளை மேம்படுத்த பொதுவான கொள்கைத்திட்டமும் செயல்திட்டமும் அமுல்செய்யப்படல் வேணடும். அதன்மூலம் எமது சமுதாயத்தில் வாய்பபுக்களும் வசதிகளுமற்ற நிலையில் வாழுகின்ற அடிமட்ட சிறுவர்களின வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்ற முடியும்.

இவ்வாறு வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் குமாரசாமி சண்முகநாதன் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சிறுவர் ஒன்றுகூடல் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.நடேஸ்வரசர்மா, ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்கள உயரதிகாரி எஸ்.யோகிராஜன், திருமதி பா.பத்மநாதன் உட்பட வேறும் பலர் பங்குகொண்டிருந்தனர்.

இந் நிகழ்வின் போது நிலையத்தின் மூலம் கல்வி உபகார நிதியைப் பெறும 109 சிறுவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சண்முகநாதன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இன்றைய நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்ற வெளிநாட்டு தன்னார்வ அமைப்புக்கள் பெயரளவில் தான் சிறுவர்களின் பிரச்சினைகளில ஈடுபடுவதாக கூறிவருகின்றன. அதன்மூலம் சிறுவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பெரு நிதிகள் பயனற்ற வகையில் செலவழிககப்பட்டு வருகின்றன.

ஆனால், பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற சிறுவர்களின் வாழ்கைத்தரங்கள் உயர்த்தப்படவில்லை.இன்றும் பல சிறுவர்கள் காலை உணவை வீடுகளில் எடுக்காத நிலையில் வெறும் வயிற்றுடன் பாடசாலைகளுக்கு வருகின்றனர். இந்த நிலையில் சிறுவர்கள் தமது கல்வியில் உண்மையான நாட்டத்தைக் கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இப்போது இருக்கும் நிலையில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற உதவு தொகைகள சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருப்பதை நாம் அனுபவரீதியாகக் காணக்கூடியாதகவுள்ளது.

இருப்பினும் கூட இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 30 சதவீதமான சிறுவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது பேருண்மையாகும். இத்தகைய சிறுவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம எல்லோரும் பாடுபட வேண்டும் என்றார். (ற-16)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உயர்ந்த இலட்சியம் ஒன்றை உறுதியாகப் பற்றிக்கொண்டு உன் வாழ்வை அதற்காகவே விட்டுவிடு. 'இறப்பது உறுதி .ஒரு பெரிய நோக்கத்திற்காக உயிரைத் துறப்பது மிக மிக உயர்ந்தது'.

சுவாமி விவேகானந்தர்

# பிரபாகரன் பின்னால் அணிதிரள முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும்

## மௌலவி எஸ்.எம்.சகீல் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

வவுனியா பிரகடனத்தை நிறைவேற்ற தமிழ் பேசும் முஸ்லிம்களும் தங்கத்தலைவன் பிரபாகரன் பின்னால் அணிதிரள வேண்டும் என யாழ்ப்பாண இஸ்லாமிய மக்கள் பணிமனைச் செயலர் மௌலவி எஸ்.எம்.சகீல் வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.சிங்கள அரசுகள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக செயற்பட்டனர் எங்களுடைய உரிமைகளை நாங்கள் பெற்றுக்கொள்வதற்கு கூட தடை விதித்தனர். அந்த நிலைமையில் தான் இந்தப் போராட்டம் உருவாக்கப்பெற்றது. இந்தப் பேராட்டத்திலும் முஸ்லிம்கள் என்றும் சளைத்தவர்கள் அல்லர். தமிழர்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்தவர்களாகவே இந்தப்போராட்டத்தைமுன்னெடுத்துச் சென்ற வரலாறுகளையும் நாங்கள் பார்க்கின்றோம்.

எங்களுடைய தாயக கடமை என்று புறப்பட்ட இந்தப் போராட்ட பயணத்திலே நாம் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் கைகோர்த்தவர்களாக என்றும் செயற்பட வேண்டும்.

நாங்கள் ஓர் குடும்ப உறவைக் கொண்டவர்கள். தமிழ் மக்கள், முஸ்லிம் சமூகங்களும் ஒரு குடும்ப உறவைக் கொண்டவர்கள் எங்களுக்குள் பலபிரச்சினைகள் எழலாம் அதனை நாங்களே தீர்ப்போம்.

வவுனியா எழுச்சிநிகழ்வில் எடுத்த முடிபுகளை நிறைவேற்ற தங்கத்தலைவன் பின்னால் அணிசேர தமிழர்கள் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தயாராக இருக்கின்றார்கள் என்றார் அவர். (ச)

# சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை 25 ஆயிரம் அமெ.டொலர் உதவி

அமெரிக்காவில் ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து உதவிவழங்க முன்வந்தமைக்காக அமெரிக்க தூதரகம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை காண்பித்துள்ள காருண்யம் மிக்க அக்கறையை இட்டு நாம் நன்றி தெரிவிப்பதாக அமெரிக்க தூதுவரகம்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள் ளது.

அவசர நிவாரண சேவையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க செஞ்சிலுவைச்சங்கத்திற்கு 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்குவதற்கு இலங்கை அரசு முன்வந்துள்ளது. இதற்கு நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

# வயோதிபப் பெண்ணைத் தாக்கிவிட்டு வீட்டில் இருந்த பொருட்கள் கொள்ளை

(கோண்டாவில்)

வீட்டில் தனித்திருந்த வயோதிபப் பெண் ஒருவரைத் தாக்கிவிட்டு அங்கிருந்த பொருட்களை கள்வர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று கோண்டாவில் கிழக்குப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன்போது அதே இடத்தைச்சேர்ந்த நடராஜா பாக்கியம் (வயது 70) என்ற வயோதிபப்பெண் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,வெளிநாட்டில் இருந்துவந்த பிரஸ்தாபப் பெண்ணின் பேரனுடன் அவரது குடும்பத்தினர் நேற்று நல்லூர் முருகன் ஆலய தேர்த்திருவிழாவிற்குச் சென்றுள்ளனர்.

அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர் சமையல் அறைக்குள் நுழைந்து பிரஸ்தாப பெண் ணை பலமாகத் தாக்கிவிட்டு பொருட்களை திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

தாக்கப்பட்டபெண் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-130)

## பேச்சு...

வியாழக்கிழமை கொழும்பில் அறிவித்திருந்தார்.இதையடுத்து புதிய இடம் ஒன் றைத் தேர்வு செய்வதில் நோர்வேத்தரப்பு தீவிரம் காட்டி வருகிறது என தூதரகப் பேச்சாளர் கிர்ஸ்டிஸ்ட் ரோம்சர்ட் தெரிவித்தார். (ச-4)

## அனுசரணையாளர்...

மக்களும் சமாதானமாக வாழ தான் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த மகிந்த, ஜனாதிபதியானால் அவற்றை உடனடியாக மேற் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

இதற்குபதிலளித்தஎஸ்.அருள்சாமி மகிந்த ராஜ பக்ஷவை நாங்கள் தேர்தலில் ஆதரிக்கிறோம். இருப்பினும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுடன் கலந்து ஆலோசனை செய்யாமலே இந்த முடிவை மேற்கொண்டுள்ளோம்.இம் முடிவில் அவர் உடன்பாடு கொள்ளமாட்டார்.

அவரது ஆலோசனையைப் பெறாமலே அரசுடன் நாங்கள் இணங்கிச் செயற்பட்டால் தற்போது அவர் எதுவும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார் என்றார்.தற்போதைய ஆளும் அரசானது தோட்டத் தொழிலாளர்களுக்கு தனியமைச்சு உருவாக்கிய காரணத்தால் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாகவும் அருள்சாமி தெரிவித்தார். (ச-8.4)

## விஜேயவர்த்தன...

என நீதிமன்றத்தில் தெரிவிக் கப்பட்டதையடுத்து அதனை பரிசீலித்த நீதிவான் எதிர்வரும் 16 ஆம் திகதி அடையாள அணிவகுப்பை நடாத்துமாறு உத்தரவிட்டார். அத்துடன் ஒரு கையை இழந்தசிலரை தேடிப் பிடித்து குறிப்பிட்ட சந்தேக நபருடன் அவர்களையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.(ச)

# திறப்புவிழா

(தென்மராட்சி)

தென்ராட்சி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அலுவலகம் மற்றும் கால்நடை தீவன விற்பனை நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கதலைவர் நா. தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் கௌரவ விருந்தினராக யாழ். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் க.சங்கர் மற்றும் தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் அன்பு ஆகி யோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-7)

## கடற்படையினர் தாக்குதல்

(மருதங்கேணி)

காங்கேசன்துறை கடற்பரப்பிற்குச் சற்றுத் தொலைவில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பிரஸ்தாப மீனவர்களின் படகை நோக்கிச் சென்ற கடற்படையினர் அவர்களின் படகுடன் தமது படகை மோதியதுடன் அவர்கள் இருவரையும் பலமாகத் தாக்கி விட்டுச் சென்றுள்ளனர். நேற்று ஏனைய மீனவர்களின் உதவியுடன் கரை திரும்பிய இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிகண்டியைச் சேர்ந்த இருதயராஜா ஜேசுதாஸ் (வயது28) அருட்பிரகாசம் அன்ரன் (வயது34) ஆகிய இருமீனவர்களுமே கடற்படையிரால் தாக்கப்பட்டவர்களாவர். (ச-35)

## நல்லூர்த் தேர்...

ஆனைக் கோட்டையைச் சேர்ந்த பரஞ்சோதி அன்னம்மாவின் 3பவுண் சங்கிலியும் திருடப்பட்டுள்ளது. திருநெல்வேலியைச் சேர்ந்த மோகனதாஸ் சோபிகாவினது 1 1/2 பவுண் கைச் சங்கிலி யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த அஞ்சலி பிரான்சிஸ் ஆசைப்பிள்ளையின் 5 1/2 பவுண் டைமன் சங்கிலி, திருமலையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சரஸ்வதியின் 9 பவுண் தாலிக்கொடி ,கோப் பாயைச் சேர்ந்த கஜலக் சனின் 1 1/2 பவுண் சங்கிலியும், மட்டுவிலைச் சேர்ந்த தயானந்தா ஜெகதீஸ்வரியின் 1/2 பவுண் சங்கிலி, நாயன்மார் வீதியைச் சேர்ந்த தம்பிராசா இராசபூபதியின் 5பவுண் சங்கிலி, மன்னாரைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரேமாவதியின் 2 1/2 பவுண் சங்கிலி, நாவற்குழியைச் சேர்ந்த சிவகுரு குணப தியின் 1 1/2 பவுண் சங்கிலி, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி பரமானந்தனின் 9 பவுண் தாலிக்கொடி, மற்றும் பணப்பையுடன் 2 பவுண் நகைகளும் பறிகொடுக்கப் பட்டுள்ளது. இவ்வாறு தமது உடைமைகளைப் பறிகொடுத் தவர்கள் நல்லூர் உற்சவகால விசேட செயலணியில் முறைப்பாடு செய்துள்ளனர். இதேவேளை திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டகள்வர்களில் சிலர் பிடிக்கப்பட்டு விசேட செயலணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இக்களவுகளில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்தவர்களென தெரிய வந்துள்ளது.

இக்களவுகளில் ஈடுபட்டு பிடிபட்டவர்களை விசாரணை செய்த போது இவர்கள் ஒரு குழுவாகவே செயற்படுவதாகவும் சில அடைமொழிப் பொதுப்பெயர்களை பயன்படுத்தி களவுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது. (ச-19)

# றம்ழானுக்கு பின்னரே ஜனாதிபதித் தேர்தல்

ஜனாதிபதி தேர்தலில் றம்ழான் நோன்புக் காலத்தில் நடத்தப்பட மாட்டாது என தேர்தல் ஆணையாளர் உறுதி வழங்கியுள்ளதாக அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

றம்ழான் காலத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு பதில் அளிக்கும் வகையிலேயே தேர்தல் ஆணையாளர் இவ்உறுதிமொழியினை வழங்கியுள்ளார்.

ஒக்டோபர் 3 ஆம் திகதிக்கும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் றம்ழான் நோன்பு அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச-08)


மிகவிரைவில்...



உங்கள் வலம்புரியில்

மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி

சி.நவநீதன் அவர்கள் எழுதும்

அன்புள்ள அம்மா

வாசிக்கத் தவறாதீர்கள்

இது கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் கட்டாயம் வாசிக்கவேண்டிய சுகநலக் குறிப்பு

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

சத்யராஜ், நமீதா நடித்த

இங்கிலீஷ்காரன்

(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)

நிறைஞ்சனாஸ் சங்கானை

காதல் புகழ் பரத், ரேணுகா மேனன் நடித்த

பெப்ரவரி 14

கா.நே: 11.00 2.45 6.00 (பு.நே)

மனோகரா யாழ்.

ஜெயம் ரவி,ரேணுகா மேனன் வடிவேல் மற்றும் பலர் நடித்த

தாஸ்

கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30

09.09.2005 முதல்

சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த

தொட்டிஜெயா

சகல·இந்தியன் சுவீற்ஸ் வகைகள்
ஐஸ்கிறீம்,குளிர்வகைகள்.



- மரக்கறி பிரியாணி
- தயிர் சாதம்
- லெமன் சாதம்
- பிறைட் றைஸ்
- பூரி
- சப்பாத்தி, குறுமா
- பரோட்டா, குறுமா

- மசால் தோசை
- வெங்காய தோசை
- பேப்பர் தோசை
- நெய் தோசை
- நெய் ரோஸ்ட்
- சாதா தோசை



Mangos

நல்லூரிற்கு வருகிறீர்களா
மாங்கோஸிற்கும் வாருங்கள்
உங்களுக்கான
அறு சுவை உணவுகள்

மாங்கோஸ்

இல. 359/3 கோவில் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.- 021 222 8294
0777684131

இந்திய சமையல் கலை நிபுணர்களால் தயாரித்து வழங்கப்படுகிறது.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.